1990

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம்

---

*[1988, மார்ச்சு மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1988, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம்

[1988, மார்ச்சு மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 10/87
1889

## பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பணச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 422 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவை திருத்துதல்.

"(ஆஆ) 117 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வீடமைப்பு நோக்கங்களுக்காக, அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மேல் அல்லது வேறுவகையாக, பிணைப் பொறுப்பின்மீது, மத்திய வங்கி அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கடன்கள் அத்துடன் முற்பணங்கள் என்பவற்றை வழங்கலாம்;".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :—

"எந்தப் பதவிக்கு அல்லது நிலைக்குச் சம்பளம் அல்லது ஊதியம் பகிரங்க நிதிகளிலிருந்து கொடுபடற்பாலதோ, அந்தப்பதவி அல்லது நிலை எதனிலும் சேவையாற்றுவதற்கெனத் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளவரான அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்ருகவுள்ள ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவராக இருக்கின்றவரான மத்திய வங்கியின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், பிரதி ஆளுநர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியிலுள்ளதெதுவும் தகுதியற்றவராக்குவதாகக் கொள்ளப்படுதலாகாது.";

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஈ) சபையின் அபிப்பிராயப்படி தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவர் தவறியுள்ளவராகவிருந்தால் :

ஆயின், இந்தப் பிரிவிலுள்ளதெதுவும் எந்தப் பதவிக்கு அல்லது நிலைக்கு சம்பளம் அல்லது வேறு ஊதியம் பகிரங்க நிதிகளிலிருந்து கொடுபடற்பாலதோ, அந்தப் பதவி அல்லது நிலை எதிலும் சேவையாற்றுவதற்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமாகவுள்ள ஒரு வங்கித்தொழில் நிறுவனத்தில், அவ்வங்கித்தொழில் நிறுவனத்தின் பணிப்பாளரொருவராக சேவையாற்றுவதற்கு (3) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்

ளவரான பிரதி ஆளுநர் எவரையும், அத்தகைய பிரதி ஆளுநர், அத்தகைய பதவியை அல்லது நிலையை வகிக்கிறார் அல்லது அத்தகைய பணிப்பாளராக இருக்கிறார் என்ற காரணத்திற்காக மாத்திரம் அத்தகைய பிரதி ஆளுநரெவரையும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பதவியிலிருந்து அகற்றுவதற்குப் பணச் சபைக்குத் தத்துவமளிப்பதாகக் கொள்ளப்படுதலாகாது.".

(இ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (3) பணச் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அதே போன்ற ஒருப்பாட்டுடன் பணச் சபையினால், தீர்மானிக்கப்படக்கூடியவாறான அதே நியதிகளின்மீது—

(அ) எப்பதவிக்குரிய அல்லது நிலைக்குரிய சம்பளம் அல்லது வேறு ஊதியம் பகிரங்க நிதிகளிலிருந்து கொடுபடற்பாலதோ அப்பதவியில் அல்லது நிலையில் சேவையாற்றுவதற்கு ;

(ஆ) பகிரங்க கூட்டுத்தாபனம் ஒன்றாகவிருக்கும் வங்கித் தொழில் நிறுவனமொன்றில், அவ்வங்கித்தொழில் நிறுவனத்தின் பணிப்பாளரொருவராகச் சேவையாற்றுவதற்கு,

பிரதி ஆளுநரொருவரைத் தற்காலிகமாக விடுவிக்கலாம். இப்பிரிவினது நோக்கங்களிற்காக "பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்பது அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 120அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 120அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"மத்திய வங்கியின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் விடுவித்தல்.

120அ. பணச் சபையானது, 23 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில் அல்லது வேறுவகையாக மத்திய வங்கியின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரையும், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன், பணச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும் மத்திய வங்கிக்கு வெளியே ஏதேனும் பதவியில் அல்லது நிலையில் சேவையாற்றுவதற்குத் தற்காலிகமாக விடுவிக்கலாம்.".